ലക്ഷ്മീഭായി

പുസ്തകം 4. ലക്കം 1.

ജനുവരി 1922

3L
LL,9C [illegible]
M22·4·1
186450.

474

M. 1530

BALAVINODINI

OR

The Children's Friend

An Illustrated Tamil Monthly for Children

TO INSTRUCT AND CHERISH
THE YOUNG HEARTS WITH SWEET INSPIRING
AND
EDUCATIVE NOVELTIES

Vol. IV] January. 1922 [No. 1

EDITED BY
VARAKAVI TIRU
A. SUBRAMANYA BHARATI

PUBLISHED BY
S... SUBRAMANYAM & CO.,
P. O., MADRAS.

...and ... Rs. 1-8-0
...reign ... Rs. 2-0-0

4-வது ஆண்டு பிறந்துவிட்டது!

பாலவிநோதினி

சந்தாநேயர்களுக்கு விஞ்ஞாபனம்.

இவ்வருஷ (1922) சந்தாத்தொகைக்காக சஞ்சிகையை வி. பி. யில் அனுப்புவதானால் இப்போது புதிதாக (15-4-21 முதல்) ஏற்பட்டிருக்கும் தபால் அறிக்கைப்படி மணியார்டர் கமிஷன் அணா 2, வி. பி. ரிஜிஸ்தர் தபால் செலவு அணா 3, ஆக அணா 5 சந்தாத்தொகை ரூ 1-8-0 யுடன் சேர்த்து அதாவது ரூ 1-13-0 கட்டவேண்டி யிருக்கும். மணியார்டர் செய்துவிட்டால் அதிகப்படி செலவில்லாமல்போகும்; ஆகையால் இதைக்கவனித்து தயவு செய்து உடனே சந்தா ரூ 1-8-0 யையும் மணியார்டர் செய்யுமாறு கோருகிறோம்.

தங்களுக்கு அதிகப்படி செலவில்லாமலிருக்கவேண்டுமென்கிற நோக்கத்தோடும் தாங்கள் எல்லோரும் உடனே மணியார்டர் அனுப்பிவிடுவீர்கள் என்கிற முழு நம்பிக்கையுடனும் இந்த ஜனவரி மாதச் சஞ்சிகையை வி. பி. செய்யாமல் சாதாரணமாய் வழக்கம்போல் அனுப்பியிருக்கிறோம்; மணியார்டர் செய்யாதவர்களுக்கு பிப்ரவரி மாதச் சஞ்சிகை வி. பி. யிலனுப்பப்படும்; இதைக் கவனிக்கக் கோருகிறோம்.

---

1. *விலாசம் மாறினால் உடனே புது விலாசத்தை எமக்குத் தெரியப்படுத்தக் கோருகிறோம்.*

2. *எப்போதும் கடிதம் எழுதும்போது சந்தா நெம்பரைக் குறித்துக் கீழ்க்கண்ட விலாசத்திற்கு எழுதக்கோருகிறோம்.*

சந்தா விபரம்.

வருடம் 1-க்கு தபால் கூலியுள்பட	*இந்தியா, பர்மா, சிலோன்*	1—8—0
	பினாங், சிங்கப்பூர் முதலிய வெளி நாடுகளுக்கு.	2—0—0

விலாசம்:—

மானேஜர்—பாலவிநோதினி ஆபீசு,
ராயப்பேட்டை போஸ்டு, சென்னை.

“இதோ பார்க்கில் ?றன் உமது சாபர்த்திபக்கை”

(10-ம் பக்கம் பார்க்க.)

சென்னை-600 008

உ

செந்திலாண்டவன் திருவடி துணை.

பாலவிநோதினி

அல்லது

குழந்தைகளின் அன்பன்

ஒரு மாதாந்தப் பத்திரிகை

தொகுதி 4 | 1922ஞு ஜனவரிமீ | பகுதி 1

பாலவிநோதினி நான்காவது ஆண்டு விஜயம்.

காப்பு.

மேதினியிற் பால விநோதினிநற் போதமெனும்
நீதிநெறி காட்டுமுயர் நேர்மைபெறத்—தீதொழித்துத்
தேசார்ந்த ஞானத் திருவளிக்கும் எஞ்ஞான்றும்
பாசாங் குசதரன்பொற் பாதம்.

186450.

சந்தனத்தால் நல்லவனம் தானுளிரு மாறுபோல்
நந்துகுலத் தோர்களைந்தன் நற்குணனுய்—வந்துதிக்கில்
அன்னவன் அருங்குணத்தால் அக்குலமும் மாட்சிமையே
மன்னும்இது கேள்வே மனு.

—பகீரதன்—மார்க்கண்டன்.

சந்திரமதி.

நீர்வளம் நிலவளஞ் சிறந்து விளங்கிய *கன்னமாபுரி என்னும் ஒரு திருநகரத்தில் மதிதயன் என்னும் பெயர்கொண்ட ஒரு மன்னவனிருந்து அரசுசெய்து வந்தான். இவன் பண்டைக்காலத்திலிருந்த சூரிய சந்திர வம்சங்களில் சந்திர வம்சத்தைச் சேர்ந்தவன். மதிதயன் தன்னை எவரும் நீதிநெறி தவறாத நிருபன் என்று மதித்துப் புகழ்ந்து பேசும்படி முறைதவறாமல் அரசுசெய்து வந்தான். இவனுக்கு ஈசுவரனுடைய கிருபையால் உலகத்தில் ஒரு குறைவுமில்லாமலிருந்தது. ஆனால் நெடுநாள் மக்கட்பேறு கிட்டாமலிருந்தது. இதனால் மன்னவன் தெய்வபக்திமேலிட்டவனாய் எல்லோர்க்கும் நல்லவனாய்ப் புண்ணியவழிகளிலே தன் மனத்தைச் செலுத்தித் தனக்குள்ள அந்தக்குறை நீங்கும் பொருட்டுத் தவம்புரிந்து வந்தான். கடவுளின் திருவருளால் அவனுக்கு ஒரு பெண்மகவு பிறந்தது.

அந்தப் பெண்குழந்தை ஒப்பும் உயர்வுமில்லாத அழகுடன் விளங்கியது. அதனால் பெரியோர்கள்

* கன்னமாபுரி என்பது கன்னோசி நாட்டைச் சேர்ந்த கண்டகீ நதிதீரத்தில் விளங்கிய ஒரு பெரிய நகரம்.

அந்தக் குழந்தைக்குச் சந்திரமதி என்னும் திருப்பெயரிட்டனர். மன்னன் தான் எல்லா நன்மைகளையும் பெற்றுவிட்டதாக மகிழ்ந்தான் எனினும் அந்தப் பெண்ணின் கழுத்தில் ஒரு திருமாங்கல்யம் விளங்கியது. இதைக்கண்ட அனைவரும் வியப்புற்றனர். மன்னன் "இது என்ன விநோதம்! இப்படி மாங்கல்யத்தோடு இந்தப் பெண்குழந்தை எனக்குப் பிறந்ததன் காரணமென்னவோ தெரியவில்லையே!" என எண்ணிக் கவலை கொண்டான்; பெரியோர்களும் அதன் காரணமுணராமல் மயங்கினார்கள். அரசன் பெரியோர்களைப்பார்த்து, "இந்தப்பெண் இவ்வாறு பிறந்திருக்கிறதே, இதைப் பிறகு மணஞ்செய்து கொடுப்பதெப்படி?" என்று

அன்னையும் பிதாவும் முன்னறிதெய்வம்.

(கொன்றைவேந்தன்)

குழந்தைகளை வளர்ப்பதில் பெற்றோர்களுக்குள்ள வருத்தத்திற்கும் கவலைக்கும் நூறுவருஷமானாலும் கைம்மாறு செய்யமுடியாது. ஆகையினால், ஒவ்வொருவனும் தன் பெற்றோர்களைச் சந்தோஷப்படுத்துவதற்குத் தன்னாற் கூடியதை எப்போதுஞ் செய்வானாக!—

(மநுஸ்மிருதி)

உன்னுடைய பெற்றோர்களில் ஒருவராயினும் அல்லது இருவராயினும் விருத்தாப்பியம் அடைந்த காலத்தில் அவர்களுக்கு நீ நல்லவனாயிரு. சீ! என்று இகழாதே! அவர்களை நிந்திக்கவும் செய்யாதே! ஆனால் அவர்களிடம் மரியாதையாய்ப் பேசு. இரக்கத்தினால் பணிவாகிய சிறகை அவர்களிடம் போடு. நான் சிறுவனாயிருந்தபொழுது, அவர்கள் என்னை வளர்த்தது போல் ஆண்டவனே, "அவர்கள் இருவர்பேரிலும் இரக்கம்வை" என்று சொல். (குர்ஆன்)

கேட்டான். பெரியோர்கள், "கவலைப்படவேண்டாம்! கடவுள் ஏதேனும் இதற்கு வழிகாட்டுவார். பரமபக்த சிரோமணியாகிய உனக்கு நல்லதே உண்டாகும்" என்றுகூறி, "நீஇன்றிரவு படுத்துக்கொள்ளும் பொழுது கடவுளைத் தியானித்துக்கொண்டு, 'இதற்கென்ன நியாயம் தெரிவிக்கிறாய்?' என்று வினவியபடி நித்திரைசெய்! உனக்குக் கனவில் கடவுளின் காட்சியுண்டாகும். உன் கவலைதீர அநுக்கிரகம் பிறக்கும்" என்றனர்.

மதிதயன் பெரியோருடைய கட்டளையைத் தெய்வத்தின் கட்டளையாகக் கொள்ளும் உயர்ந்த குணமுடையவன்; ஆகையினால் அவர்களுடைய சொற்படியே இரவில் கடவுளைத் தியானித்துக்கொண்டே படுத்து நித்திரைசெய்தான். எங்கும் நிறைந்தவனும் எல்லாவற்றையும் உணர்ந்தவனுமாகிய ஈசுவரன் அவன் கனவிலே தோன்றி, "வேந்தனே! நீ கவலைப்படாதே! உன்னுடைய அருமை மகளின் கழுத்திலிலகும் திருமாங்கல்யம் இனி உங்களுக்குத் தெரியாது. உங்களுக்குமல்லாமல் வேறு ஒருவர்க்குமே தெரியாது; இனி இந்தப்பெண்ணை மணந்து கொள்ளுகிறவன் எவனோ அவனுக்கே தெரியும். ஆதலால் நீ கவலைப்படாதே" என்று திருவாய்மலர்ந்தருளி மறைந்தார்.

பிறகு மன்னனெழுந்து தனக்குக் கடவுள் தரிசனங் கிடைத்ததையும் அவர் திருவாய் மலர்ந்தருளியதையும் தன் மனைவியோடு சொல்லி உடனே தன் குழந்தையைப் பார்த்தான். குழந்தையின் கழுத்தில் முன்னே விளங்கிய திருமாங்கல்யம் இப்போது இவர்க

ளுடைய கண்ணிற்குத் தெரியாமலிருக்கவே பரமசந்தோஷமடைந்து இறைவனைத் தியானித்து மகிழ்ந்தார்கள்.

அப்பால் அரசனும் அரசியும் சந்திரமதியை அன்பும் ஆதரவுமாக வளர்த்துவந்தார்கள்; சந்திரமதியின் ஆயுள் அபிவிருத்தியைக் குறித்து அநேக தானதருமங்கள் செய்துவந்தனர். சந்திரமதி கடவுளின் திருவருளால் குழந்தைப்பருவம்கடந்து, பேதை பெதும்பை முதலிய பருவங்களை அடைந்து, அந்தந்தப் பருவங்களில் எப்படி எப்படி இருக்கவேண்டுமோ அப்படியெல்லாம் விளையாடினாள். பிறகு மங்கைப் பருவமடைந்து திருமகள்போல் விளங்கினாள். மதிதயன் தன் மகளுக்கு, பெண்கள் தெரிந்துகொள்ள வேண்டியவைகளையெல்லாம் கற்பித்துவந்தான். ஆதலால், சந்திரமதி பெரியோர்க்கு அடங்கி நடக்கும் உயர்ந்த குணமுடையவளாயும் தெய்வபக்தி யுடையவளாயும் விளங்கினாள்; செல்வச்செருக்கு சிறிதுமில்லாமல் எல்லோருக்கும் எளியவளாயிருந்து வந்தாள். ஏனெனில்

"குஞ்சியழகுங் கொடுந்தானைக் கோட்டழகும்
மஞ்ச ளழகு மழகல்ல—நெஞ்சத்து
நல்லம்யாம் என்னும் நடுவு நிலைமையாற்
கல்வி யழகே யழகு" என்பதை

அவள் நன்றாய் அறிந்திருந்தாள்.

இப்படி சந்திரமதியென்னும் பெண்மணி ஒருத்தி மதிதயனுக்கிருக்கிறாள் என்னும் செய்தி எங்கும் பரவியது. ஆகவே பலதேசத்து அரசகுமாரர்களும் சந்திரமதியை மணந்துகொள்ள விரும்பிக் கன்னோசி நாட்

டிற்குவந்து மதிதயனைக்கண்டு கேட்டனர். மதிதயன் என்ன சொல்வான்; வந்தவர்கட்கெல்லாம், "ஐயன்மீர்! இந்த என்பெண்ணின் கழுத்திலே திருமாங்கல்யம் ஒன்றுண்டு; அது தெய்வத்தன்மை பொருந்தியது; அவளுடன்கூடவே பிறந்தது; எவன் சந்திரமதிக்கு நாயகனாவானோ அவன் கண்ணுக்கே அது தெரியும்; மற்றவர்கட்குத் தெரியாது; இது கடவுளின் திருவாக்கு. ஆதலின் அவளுடைய கழுத்தில் இலகும் திருமாங்கல்யத்தைக் காண்பவனே அவளுக்கு நாயகன்" எனக்கூறி வந்தான்.

அநேக அரச குமாரர்கள் வந்து பார்த்துவிட்டுப் போய்விட்டனர். ஒருவர்கண்ணுக்கும் திருமாங்கல்யம் புலப்படவில்லை. சந்திரமதிக்கு மணஞ்செய்விக்கவேண்டிய பருவம் வந்தபிறகும் இப்படிக் காலம் கடந்துபோவதுபற்றி மதிதயன் பெரியகவலைகொண்டு என்ன செய்வதென்று தெரியாமல் மயங்கினான். ஆயினும் அவன் தெய்வபக்தியுடையவனாதலால், "அன்று நமது கனவிலே தோன்றித் திருவருள்பாலித்த இறைவன் சொன்னது வீணாகுமா? அது ஒருகாலும் வீணாகாது; அவளுக்குத்தக்க நாயகனை அவர் படைத்தேயிருப்பார்; வருவான்" என்று உறுதிகொண்டான். சந்திரமதியும் தனக்கேற்ற ஒரு நாயகனையடைய விரும்பினாள். ஆதலால், அவளும் தன் எண்ணத்தை நிறைவேற்றும்படி கடவுளையே தியானித்துவந்தாள். "அவனையன்றி அணுவும் அசையாது" என்பதை அவள் உணர்ந்தவள்.

சந்திரமதி இப்படி மதிதயனிடம் கன்னமா புரி

யில் வளர்ந்துவரு மிந்தக்காலத்தில், அயோத்தியில் திரிசங்குவின் புத்திரனாகிய அரிச்சந்திரனென்பவன் அரசுபுரிந்துவந்தான். இவன் சூரியவம்சத்தைச் சேர்ந்தவன். இவனிடம் சகல நல்ல குணங்களும் நிறைந்திருந்தன. இவன் கலைகளையெல்லாம் சந்தேக மில்லாமல் ஓதி உணர்ந்திருந்தனன்; "வாய்மை கடைப்பிடி" என்னும் போதனையை மறவாமல் அதில் உறுதிகொண்டு தன் புகழ் எங்கும்பரவ விளங்கினான். வாய்மை என்னும் உயர்ந்த குணம் இவனிடம் அமையவே அதற்கு இனமாகிய, தூய்மை, நேர்மை, பொறுமை, பெருமை, அறிவுடைமை, ஆண்மை முதலிய நற்குணங்களெல்லாம் குடிகொண்டன. இனம் இனத்தோடு சேரு மென்பது பழமொழியல்லவா? ஆகவே அரிச்சந்திரன் நல்ல குணங்களுக்கு ஓர் ஆலயம் போல் விளங்கினான்.

இவன் ஒருநாள் சபையிலே வீற்றிருக்கையில் சில பெரியோர்கள் வந்தார்கள். அரிச்சந்திரன் பெரியோர்களை வணங்கி மரியாதையோடு வரவேற்று வீற்றிருக்கச் செய்து உபசரித்தான். பெரியோர்கள் அரிச்சந்திரனை ஆசீர்வதித்தார்கள். இப்படிப் பெரியோர்கள் அடிக்கடி அரிச்சந்திரன் சபைக்கு வருவதுண்டு. அரிச்சந்திரனும் அவர்களுக்குத் தக்கமரியாதை செய்து அவர்கள் கூறும் புத்திமதிகளாகிய அரிய செல்வத்தைப் பெறுவதுண்டு. ஆகையினால் அவன் "நீங்கள் விஜயஞ் செய்தது என்பாக்கியம்! கிடைத்தற்கு அரியது. நீங்கள் எங்கிருந்து வருகின்றீர்கள்? எந்தத் தேசங்கள் சென்றிருந்தீர்கள்? எந்தத் தீர்த்தங்கள் ஆடினீர்கள்?

அங்கு ஏதேனும் புதுமை கண்டதுண்டோ?" என்று கேட்டான். பெரியோர்கள், "வேந்தே! நாங்கள் வழக்கம் போல் யாத்திரை போய் வருகின்றோம். கன்னோசி நாட்டுக்குச் சென்று அந்த நாட்டு மன்னனாகிய மதிதயனென்பவனைக் கண்டோம். அவனுக்கு அவன் தவமே பெண்ணுருக் கொண்டதென்று சொல்லும்படியான பேரழகு வாய்ந்த ஒரு பெண் இருக்கின்றாள். அவள் அழகுக் கேற்றபடி பெயரும் சந்திரமதி என்று வைத்திருக்கிறது. அந்த மங்கையை மணக்கத்தக்கவன் நீயே என்பதுணர்ந்தோம். ஆகையினால் நீ அந்த ரூபவதியை அடைவதற்கு வேண்டுவன செய்வாய்" என்று கூறினார்கள்.

வேந்தன் அதுகேட்டு மகிழ்ச்சியடைந்து, "பெரியோர்களே! உங்கள் கருணை யென்றும் மறக்கத்தக்கதன்று; அடியேனிடத்து இவ்வளவு அன்புவைத்திருப்பது பற்றி நான் பெருமகிழ்ச்சி யடைகின்றேன். அந்த மங்கையை அடைவதற்குரிய வழியைக் கவனிக்கின்

நீதி.

ஓர் ஓட்டைப் பாத்திரத்திலுள்ள ஜலம் எப்படி ஓட்டையின்வழியாய் வெளியேபோய் முதல் வைத்தஜலம் குறைந்து கொண்டே வருகிறதோ அப்படியே நமது ஆயுளும் தினம் தினம் மணிக்கு மணி நிமிஷத்திற்கு நிமிஷம் குறைந்து கொண்டேவருகிறது. மூப்பு அதிகரிக்க அதிகரிக்க இருக்க இடமற்றுத்திரியும் பிணிப்பிசாசுகளும் ஆநந்தமாக நமது சரீரத்தை இருப்பிடமாகக் கொள்கின்றன: இப்படி அவற்றின் வசமான சரீரம் நாளுக்குநாள் சுவாதீனமிழந்து தடுமாறி முடிவில் நமனுக்கிரையாகிறது இப்படி நிலையற்றுச் சுவாதீனமற்றுப் போகும் இம்மனித வாழ்க்கையின் நிலையை உணராது பலர் அநேக கெட்டகாரியங்களைச்செய்து வீணே அழிகின்றனர். இது எத்தனை பேதைமை!

றேன். அதற்கு உங்களுடைய ஆசீர்வாத பலமும் வேண்டும்" என்று சொல்லிப் பணிந்தான். பெரியோர்கள், "மன்ன! நீ சித்திபெறுவாய்! முயற்சிசெய்" என்று கூறி விடைகொண்டனர்.

பிறகு மன்னன் சந்திரமதியை மணஞ்செய்வதற்குரிய ஏற்பாடுகளைச் செய்து கொண்டு கன்னோசி நாட்டையடைந்து மதிதயனுக்குத் தான் வந்துள்ள நோக்கத்தை உரைத்துவரும்படி ஒரு தூதனை அனுப்பினான். தூதன் கன்னமாபுரி போய் அரசனைக் கண்டு அரிச்சந்திரன் வந்திருப்பதையும் அவன் நோக்கத்தையும் கூறினான். மதிதயன் அதைக்கேட்டதும் பெருமகிழ்ச்சியடைந்து, படை, கொடி, குடையுடன்சென்று அரிச்சந்திரனை எதிர்கொண்டழைத்து வந்து, அம்மன்னனுக்கேற்ற ஒரு திருமாளிகையில் அவனை இருக்கும்படி செய்தான். அங்கு ஒருவருக் கொருவர் க்ஷேமம் விசாரித்துக் கொண்டனர். பிறகு மதிதயன், "தாங்கள் என் புத்திரியை ஒருமுறை பார்க்க வேண்டும். பிறகுதான் விவாகம் நிச்சயித்தல் வேண்டும். அதனை நாளையதினம் வைத்துக் கொள்வோம்" என்று கூறி அரிச்சந்திரனுக்கு வேண்டிய உபசாரங்களைச் செய்து விடைகொண்டு தன் அரண்மனை வந்து சேர்ந்தான்.

மறு நாள் சூரியோதயமாயிற்று. மதிதயன் சந்திரமதியை ஓர் அழகிய திருமாளிகையில் பல தோழிமார்களுடன் வீற்றிருக்கும்படி செய்து, அரிச்சந்திரனை அங்கு வரும்படி அழைத்தான். அரிச்சந்திரன் தனக்குரிய ஆடம்பரத்துடன் புறப்பட்டு அந்தமாளிகை

சென்று அங்கமைத்திருந்த திவ்யாசனத்திலே அமர்ந்தனன். மதிதயனும் ஓராசனத்தி லமர்ந்து தன் மகளை அரிச்சந்திரன் முன் வரவழைத்தான். சந்திரமதி தன் தாதியர் சூழ சபைக்குவந்து அரிச்சந்திரனையும் பெரியோர்களையும் தன் தாய் தந்தையரையும் நமஸ்கரித்தாள். எல்லோரும் ஆசீர்வதித்தனர்.

இப்பொழுது அரிச்சந்திரனுடைய கண்கள் சிவந்தன! மீசை படபட வென்று துடித்தது! அவனுக்குப் பெருமூச் சுண்டாயது! இவற்றைக்கண்டா ரனைவரும் அஞ்சினர்; காரணமறியாமல் திகைத்தனர். எல்லோரும் அரிச்சந்திரனுடைய முகத்தையே கவனித்தனர். சபை நிச்சப்தமாயிருந்தது. மதிதயன் பெரும் பயமடைந்தானாதலால் அவன் கைகால்கள் நடுக்கங் கொண்டன. இப்பொழுது அரிச்சந்திரனை நோக்கி,

மதிதயன்:—வேந்தே! ஏன் கோபிக்க வேண்டும்? காரணம் யாது? தெரிவிக்க வேண்டுகின்றேன் என்றான்.

அரிச்சந்திரன்:—காரணமா கேட்கின்றீர்? என்னை அவமானப் படுத்தவா இச்செய்கை செய்தீர்? இந்தக் கொடிய செய்கை செய்ய முன் வந்த உமது நெஞ்சத் துணிவை என்ன வென்று சொல்வது? இது என்ன? நீதிதவறிய நிருபனிருந்து ஆளும் உலகமா? இந்த இழிவான செய்கை செய்ய உமது மனமெப்படி ஒப்பியது? ஒரு பெண்ணை ஒருவனுக்கு மணஞ்செய்து கொடுத்த பின்பு இன்னொருவனுக்கு மணஞ்செய்து கொடுக்க முன் வருவது மதியாகுமா? இது உமது சாமர்த்தியம் போலும்! இதோ பார்க்கிறேன் உமது சாமர்த்தியத்தை''— என்று கூறி உடைவாளை உருவிப் போருக் கெழுந்தான்.

போருக்கு எழவே, மங்கையர்களும் சந்திரமதியும் கர்ஜிக்கும் சிங்கமொன்றை அகஸ்மாத்தாகக் கண்டது போல் நடுங்கினர்; மருண்டனர்; ஏங்கிக் கலங்கினர். ஏனையோர் திகைத்து மரம்போல் நின்று விட்டனர். மதிதயன் மெய்ந்நடுக்கத்துடன் முன் வந்து, "வேந்தர் வேந்தே! கோபம் வேண்டாம். இதன் இரகசியம் வேறு. இந்நங்கையின் கழுத்தில் ஒளிரும் மாங்கல்யம் இவளோடு கூடவே பிறந்தது. எவரும் கட்டினதன்று. இந்த மாங்கல்யம் இப்பெண்ணை மணந்து வாழ்வதற்குரிய பாக்கிய முடையவனுக்கே தெரியுமென்பது தெய்வத் திருவாக்கு. இந்த மாங்கல்யம் உம்மையன்றி வேறெவர்க்கும் இது வரையில் புலப்படவில்லை. உமது கண்களுக்குத் தெரிந்தபடியால், இம்மாதை மணந்து கொள்ளத்தக்கவர் நீரே! தாம்நினைத்தது போல் எதுவும் வித்தியாசம் கிடையாது" என்று கூறினன்.

இதைக்கேட்டதும் அரிச்சந்திரனுடைய உடைவாள் அவன் கரத்திலிருந்துதானே நழுவிக் கீழேவிழுந்தது. கோபம்மாறியது. தலைதாழ்ந்தது. சாந்தம் முன்னின்றது. இப்போது அரிச்சந்திரன் ஒன்றுந் தோன்றாதவனாக நின்றான். சபை நிச்சப்தமாயிருந்தது. எல்லோரும் அதிசயிக்க, "சந்திரமதி பரிசுத்தமான கன்னிகை! கிடைத்தற் கரியவள்! ஜகதீசன் அருளர்ல் அவள் கழுத்தில் மாங்கல்யம் திகழ்கின்றது! மதிதயன் குற்றமற்றவன்," என்னும் அசரீரிவாக்கு உண்டாயது! இந்தத்தெய்வவாக்கைச் செவியுற்றதும் யாவரும் சித்தந்தெளிந்தனர். சந்திரமதி உயிர் பெற்றவளானாள். மதிதயன் தான் பெண்பெற்ற பயனை

அடைந்தவனானான். அரிச்சந்திரனும், ஈசனுடைய செயலை எண்ணி மகிழ்ந்து தியானித்தான்.

அப்பால் பெரியோர்கள் ஒரு முகூர்த்தநாளை நிச்சயித்தார்கள். அன்று வெகு விமரிசையாக இந்த உலகமேயல்லாமல் தேவலோகமும் கொண்டாடும்படியாக அரிச்சந்திரனுக்கும் சந்திரமதிக்கும் விவாகம் நடந்தேறியது. பிறகு அரிச்சந்திரன் சந்திரமதியுடன் அயோத்திக்கு வந்து சுகமாக வாழ்ந்துவந்தான்.

ஹாஸ்யம்.

சென்னப்பட்டணத்தில் ஒரு வைத்தியர்:—நோயாளியைப் பார்த்து "நீ ஜீரகக் கஷாயம் போட்டுத் தினம் காலையில் சாப்பிட்டு வரவேண்டும்" என்றார்.

நோயாளி:—செய்யுங்கள். (நோயாளி சென்னப் பட்டணத்தான்)

வைத்தியர்:—(திருச்சிராப்பள்ளி ஜில்லாக்காரர்) என்னப்பா, உன்னைக் கஷாயம்போட்டுச் சாப்பிடச் சொன்னால் செய்யுங்கள் என்று சொல்லுகிறாயே, என்னையா சாப்பிடச் சொல்லுகிறாய்?

நோயாளி:—இல்லேங்க, செய்யுங்க.

வைத்தியர்:—என்னையே கஷாயம் செய்து தாச் சொல்லுகிறாயா; அல்லது என்னையே கஷாயம் சாப்பிடச் சொல்லுகிறாயா? நான் சாப்பிட்டு உனக்கு வியாதி சௌக்கியமாக வேண்டுமா?

நோயாளி:—இல்லேங்க, இல்லேங்க, அடடா, வேண்டாங்க.

வைத்தியர்:—அடடா; என்னை என்னதான் செய்யச்சொல்லுகிறாய்? ஒன்றும் மருந்தே வேண்டாமென்கிறாயா!

நோயாளி:—இல்லேங்கண்ணா?

வைத்தியர்:—கோபங் கொண்டு உஸ்—வெளியே போ—என் நேரத்தை வீணாக்காதே. சொன்னபிரகாரம் செய், போ.

நோயாளி:—வைத்தியர் கோபித்துக் கொண்டு விட்டார் என்று எண்ணிக் கொண்டு, "இல்லேங்க, இல்லேங்க, கோபிச்சிக்கப் பிடாதுங்க" என்றான்.

பக்கத்திலிருந்த ஒருவர் வயித்தியரைப் பார்த்து "இன்னும் உங்களுக்கு இவ்வூர் பேச்சு பிடிபடவில்லை போல் தெரிகிறது. இந்த ஊரில் நாம் ஒருவனைப் பார்த்து எதையாவது ஒன்றைச் செய்யச் சொன்னால் அவன் ஆகா! அப்படியே செய்கிறேன் என்று சொல்வதற்குப் பதிலாய் 'செய்யுங்கள்' என்று சொல்வது வழக்கம். அப்படியே இவனும் சொன்னான். கஷாயம் போட்டுச் சாப்பிடுவான். நீங்கள் கோபித்துக்கொள்ளவேண்டாம்" என்று சொல்லி நோயாளியைப் பார்த்து "என்னப்பா, வைத்தியர் சொன்னது தெரிந்ததா—கஷாயம் போட்டுச் சாப்பிடுகிறாயா" என்றார்?

நோயாளி:—செய்யுங்கசாமி.

வைத்தியருக்குக் கோபம்போய் சந்தோஷமுண்டாய்க் குலுங்கக் குலுங்க நகைத்து "நல்லது நீ போ—நானே செய்கிறேன்" என்று நோயாளியை அனுப்பி விட்டார்.

எஜமானும் பணியாளும்.

ஏவலா ளின்றி எஜமா னெனும்பட்டம்
பூவுலகில் யார்க்குப் பொருந்திநிற்கும்—மேவிவரும்
அவ்விருவர் கைப்பற்றற் காமொழுக்கம் யாமுரைப்பாம்
செவ்விதினிங் காய்ந்து சிறிது—

எஜமானர்? பணியாளார்? என்னும் விஷயத்தை நாம் நிதானமாக யோசிப்போமானால், பிரமா முதல் பிபீலிகை (எறும்பு) பரியந்தமுள்ள சகல உயிரும் ஏககாலத்தில் இவ்விரண்டிற்கும் பாத்தியப்பட்டிருப்பது நன்றாக விளங்கும். ஒருவருக்குப் பணியாளாயிருப்பவன் அதேகாலத்தில் சிலருக்கு எஜமானாயிருக்கிறான். அப்படியே எஜமானும். இது உலகானுபவம். இதில் இருவரும் சமமான நிலைமையை அடைகிறார்களே யல்லாது உள்ளபடி பெருமைபாராட்ட எஜமானுக்கு இடமில்லை. ஒன்றுமறியாத சிசுவும் தன் அழுகையாகிற கட்டளையால் எஜமானத்வத்தை நடத்தி வருகின்றது. ஆகையால், கடவுள் ஒருவரே உண்மையான எஜமான். மற்றவரெல்லாரும் அவருடைய பணியாளர். உலக ஒழுங்கிற்கு இவ்விரண்டு பிரிவுகளும் உபசாரமாக ஏற்பட்டுள்ளன. அச்சாணி யில்லாத தேர் முச்சாணும் ஓடாது. அதுபோல அதிகாரியில்லாத விவகாரம் சரியாக நடைபெறாது. நிற்க,

இடம், பொருள், ஏவல் என்னும் சௌகரியங்கள் மூன்றையுங்கொண்டு, அம்மூன்றையும் சரியான வழியில் நடத்தக்கூடிய வல்லமை பெற்றவன் எவனோ அவனே உத்தம எஜமான். அப்படிப்பட்ட எஜமானிடத்தில், ஏவிய வேலையைத் திருப்திகரமாகச் செய்வதாய் ஒப்புக்கொண்டு அமர்ந்த பின், அவனுடைய மனங் கோணாதபடி நடந்துவரும் திறமையுள்ளவனே நல்ல பணியாள். இவ்விருவருக்கும் கடவுள் இகபர சுகத்தை எளிதில் அளிப்பார்.

தத்தமது கடமைகளைக் குறைவற நடத்திவருவதற்கு இவ்விருதிறத்தாரிடத்தும், அன்பும், பொறுமையும் அத்தியாவசியமாயிருக்கவேண்டும். அவசரத்தால் எஜமான் தப்புச் செய்துவிடின், பணியாள் அதைப் பொறுக்கவேண்டும். அப்படிப் பொறுத்துக்கொள்ளாமல் அணுவை மேருவாக்க முயல்வது அழகாகாது. அவ்வாறே எஜமானும் பணியாள் விஷயத்தில் நடந்துகொள்ளவேண்டும்; அல்லது பிரியமான வசனங்களால் அவனைத் திருத்தவேண்டும். மனிதர் தவறுவது சகஜம். 'கொசு மூச்சில் கோபுரங் குலுங்கியது' என்று அற்ப விஷயங்களுக்கெல்லாம் ஒருவர்மீ தொருவர் மனஸ்தாபங்கொண்டுவிடுவது யதார்த்த எஜமானத்வமும் பணித்வமுமாகாது.

எஜமான் எப்போதாவது கோபித்துக்கொண்டால், பணியாள், "போதும், போதும் இந்த எஜமானிடத்தில் நான் வேலைசெய்து வாழ்ந்தது? தேடிப்பிடித்தாலும் இப்படிப்பட்ட எஜமானைத்தான் தேடிப் பிடிக்கவேண்டும். என்னை இவர் மனிதனென்றே எண்ணவில்லைபோ

னும்! அந்த எண்ணந்தான் இவருக்கு எப்படி வரும்? எதுவும் பரம்பரையாய் இருக்கவேண்டாமா? 'காணாது கண்ட கம்பங்கூழைச் சிந்தாமல் குடியடா சில்லி மூக்கா' என்கிறபடி இந்த ஜன்மத்தில் இவர் இந்த போகத்தைக்கண்டு இப்படி இடறிவிழுகிறார். இது என்ன நீடிக்கவா? அதேது. அப்படித்தான் என்ன இவர் படையாது படைத்தது. நாம் கண்ணால் கண்ட கோடீசுவரர்களில் இவர் எந்த மூலை? ஏரி எத்தனை காலைக்கண்டது, கால் எத்தனை ஏரியைக்கண்டது. இது தெரியாமல் இவர் இவ்வளவில், தமதுருவே தமக்குத் தோன்றுதபடி ஒளிமழுங்கிப் போவாரானால் இன்னும் சரியான அந்தஸ்து வந்துவிட்டால் இவருடைய தலையும் காலும் தமதிடத்தை மாற்றிக்கொள்ளும்போலும். நல்லது—நல்லது; செட்டியாருக்கு மொருகாலம், சேவகனுக்கு மொருகாலம் என்பதை நாமறியோமா? என்னவோ காலக்கொடுமையால் இவரிடம் வந்து சேர்ந்தேன். வயிறெரிபவளுக்கு மாலைக்கண் மாப்பிள்ளை வாய்த்தது போல இவர் எனக்கு எஜமானனர். உழைத்த உழைப்பெல்லாம் காட்டிலெரிந்த நிலவாய் முடிந்தது; அன்றியும் கடலிற் கரைத்த காயமாய்த் தீர்ந்தது. கடைசியாய் கந்தைக்கும் கூழுக்குங் காற்றாய்ப் பறக்கலானேன்'' என்று எஜமானைத் தூற்றக்கூடாது. அவரவர் செய்த வினையின் அளவாகத்தானே சுகமுந் துக்கமும் ஏற்படுகின்றன.

பணியாள் ஏதோ அறியாத்தனத்தால் எஜமானைக் குறை கூறினாலும், எஜமான் அதை யொருபொருளாகக் கொண்டு, சந்துவிட்டாய் வந்து விட்டே னென்று ஊர்க் குருவிமேல் ராமபாணந் தொடுக்க முந்தக்கூடாது.



கண்ணப்பநாயனாரின் அன்பு.

மாசற்ற நெஞ்சுடையர் வன்சொலினி தேனையவர்
பேசுற்ற வின்சொற் பிறிதென்க — ஈசற்கு
நல்லோ னெறிசிலையோ நன்னுதா லொண்கருப்பு
வில்லோன் மலரோ விருப்பு.

கஜேந்திர மோக்ஷம், கண்ணப்பன்.

வரகவி திரு. அ. சுப்ரமண்யபாரதி யவர்கள் இயற்றியது.

விலை அணா 4.

“புகைக்கினுங் காரகில் பொல்லாங்கு கமழுமோ?” கலக்கினுந் தண்கடல் சேராய்விடுமோ? “அரைக்கினுஞ் சந்தனம் தன் மணங்குன்றுமோ?” என்று பெருமை பாராட்டிப் பராமுகமாய்ப் போகவேண்டும்.

சமீப காலத்தில் சிகாகோ என்னுந் தேசத்தில் ஒரு கோடீசுவர ரிருந்தார். அவ்வளவு தனவந்தரா யிருந்தும் அவரிடத்தில், சாந்தம், கருணை, ஈகை, இரக்கம், தெய்வவிசுவாசம் முதலிய நல்லகுணங்கள் நிரம்பி யிருந்தன. அபயம் என்று வந்தவரை அன்புடன் ஆதரிக்கும் தீரபுருஷர். தம்மையண்டியுள்ள பரிசனங்களை மிகவும் பட்சமாய் நடத்திவந்தார். அவரிடம் ஒரு வேலையாள் தன் சிறுவயதிலிருந்து ஊழியஞ் செய்து வந்தான். அவரவனைப் பலவாறு சோதித்தும், அவன் அதிவிசுவாசத்தோடு அவரிட்ட வேலைகளை யெல்லாம் சுறு சுறுப்பாகவும் குறிப்பறிந்துஞ் செய்துவந்தான். ஒருசமயம் அவர் தமது குடும்பத்துடன் கடல் மார்க்கமாக அயல் நாட்டுக்குப்போக நேர்ந்தது. கப்பல் கொஞ்சதூரம் போனதும் திடீரென்று பெரும் புசல் தோன்றிக் கப்பலைக் கவிழ்த்துவிட்டது. அப்போது அந்த வேலையாள் தன் உயிரைப் பொருட் படுத்தாமல் கடலில் நீந்திய வண்ணம் கப்பலிற் கட்டியிருந்த படகொன்றை அவிழ்த்து அதில் தன் எஜமான் முதலானவரைத் தூக்கிப் போட்டுப் படகை வெகு திறமையுடன் நடத்தி வந்து கரையிற் சேர்த்தான்—அவன் செய்த தீரமான செய்கையைப் பார்த்துப் பரமானந்த மடைந்த எஜமான் வீடு சேர்ந்ததும் அவனை அருகிலழைத்து, இருகையாரத் தழுவிக் கொண்டு “அப்பா! இனி நீ எனக்கு வேலையாளாயிரு

க்கவேண்டாம். என் பந்துவர்க்கத்தி லொருவனா யுன்னைப் பாவித்து விட்டேன்—உனக்கு வேண்டிய திரவியங்களை எடுத்துக் கொண்டு, என்னைப் போல் ஓர் எஜமானாயிருந்து, உனக்கிஷ்டமான இடத்தில் சுகமாக வாழக்கடவாய்" என்று சொல்லி, பொக்கிஷத் திறவுகோலை அவன் கையில் கொடுத்தார்.

அவன் அதைப் பெற்றுக் கொள்ளாமல் சாஷ்டாங்கமாக அவர்காலில் விழுந்து பணிந்து "ஐயனே! தாங்கள் இப்படி அடியேனை வேறுபிரிக்கத் துணிந்தது எதற்கோ? நான் புதுமையான காரிய மொன்றுஞ் செய்து விடவில்லையே. என் கடமையைத் தானே செய்தேன். அன்னதாதாவாகிய தங்களுக்கல்லாமல் வேறு யாருக்காக நான் என் உயிரை வைத்திருக்கிறேன். பொருளைப் பெரிதாக நான் ஒருபோதும் நினைக்கவில்லை. தங்கள் விலையற்ற அன்பையன்றோ என் உயிரினுஞ் சிறந்ததாக மதித்திருக்கிறேன். அடிவேரற்ற கொடிபோலடியேன் எப்படித் தங்களை விட்டுப் பிரிந்து தனியே வசிக்கத்துணிவேன்? துணிந்தால் இனத்தை விட்ட மான் போலாகேனோ? இந்தக் கட்டை யுள்ளளவும் அடியேனைத் தங்கள் பாதசேவையி னின்றும் நீக்காமல் ரக்ஷித்தருளும்படி மிகவும் தாழ்மையாய்ப் பிரார்த்தித்துக் கொள்ளுகிறேன்" என்று கண்களில் நீர் ஆறாய்ப் பெருகநின்று கதறினான்.

இந்தப் பரிதாபகரமான மொழிகளைக் கேட்டதும், எஜமான் சித்திரப் பதுமையாய் விட்டார்; பதில் சொல்ல நாவெழாதவரானார். அவரையும் அறியாமல் அவர் கண்கள் கரைகடந்த வெள்ளம்போல் நீர்ப்பெரு

க்கை யூற்றத் தொடங்கின. உடனே அவர் அவனை இறுகத்தழுவிக் கொண்டு "என் உத்தமமான குணரத்தினமே! உன் இஷ்டம் போலிரு. இனி நான் உனக்கு யாதொரு வேலையு மிடமாட்டேன். என் சொத்தெல்லாம் உன்னுடையதே—நீ எப்படி விநியோகித்தாலும் ஆக்ஷேபங் கிடையாது. இந்த விஷயத்தில் நீ கொஞ்சமும் கவலையுற வேண்டாம்" என்று கூறினார். அவனும் அவர் விருப்பின்படி தன் கடமையை மறவாது நடந்து வந்தான்.

பார்த்தீர்களா பிள்ளைகளே! எஜமானுக்கும் பணியாளுக்கும் உள்ள உள்ளன்பை. இந்த வேலையாளைப் போல் நீங்களும் உங்கள் எஜமானராகிய பெரியவர்களிடம் நடந்து வந்தால் அவர்கள் உங்களைப் பேரன்புடன் பாதுகாத்து வருவார்கள். கடவுளும் கிருபை புரிவார். சுபம். சுபம்

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை,
சென்னை.

மூர்க்கர் பெரியரின் முதுமொழிகொள்ளார்.

"ஆலைப் பலாவாக்க லாமோ [1]அருஞ்சுணங்கன்
வாலை நிமிர்க்க வசமாமோ—நீலநிறக்
காக்கைதனைப் பேசுவிக்க லாமோ கருணையிலா
மூர்க்கனைச் சீராக்க லாமோ"—ஔவை அருந்தமிழ்.

"[2]இடம்பட மெய்ஞ்ஞானங் கற்பினு மென்றும்
அடங்காதா ரென்று மடங்கார்—[3]தடங்கண்ணாய்
உப்பொடு நெய்பால் தயிர் [4]காயம் பெய்து அடினும்
[5]கைப்பறாப் பேய்ச்சுரையின் காய்" —நாலடியார்.

---

[1] அருசுணங்கன் = அருமையான நாய்; [2] இடம்பட = அதிகமாக; [3] தடங்கண்ணாய் = விசாலமான கண்ணையுடையவளே; [4] அடினும் = சமைத்தாலும், [5] கைப்பு = கசப்பு.

மரத்துப்பேயை மனிதப்பேய் பிடித்தது!

அம்மங்குடியில் அடுக்குருட்டி என்று ஒரு குடியானவனிருந்தான். அவனுக்கு, கலப்பை, உழவுகோல், ஏற்றம், இவை போன்ற பலசாமான்கள் செய்ய மரம் வேண்டியதாயிருந்தது. அதற்காக அவன் அவ்வூரில் வாய்க்காங்கரையின் மேலிருந்த ஒரு பெரிய புளியமரத்தை விலைக்கு வாங்கினான். அந்தமரம் வெகு காலங்கண்டமரம். அதில் ஒரு பேய் வசித்துக்கொண்டிருந்தது. அது இவனுக்கெப்படித்தெரியும். தெரியாததாகையினால் இவன் ஒருநாள் அதிகாலையிலேபோய் அந்த மரத்தை வெட்டப்போனான். அந்த மரத்திலிருந்த பேய், "அடே அடுக்குருட்டி" என்று அழைத்தது. அடுக்குருட்டி பயப்படாமல், "யாரடா! என்மரத்தின் மேலேறிக்கொண்டு என்னை அடே என்றழைக்கிறவன்?" என்றுகேட்டு, "நீ இன்று தப்பப்போவதில்லை" என்றான்.

பேய், "ஓகோ! இவன் தைரியசாலியாக இருக்கின்றான். இவனிடம் நம்முடைய ஆட்டமும் ஆர்ப்பாட்டமும் பலியா. இவனை நயந்துதான் போகவேண்டும்" என்று கருதி, உடனே, "அப்பா கோபங்கொள்ளாதே! நான் வெகுகாலமாக இந்த மரத்திலே வசித்து

வரும்பேய்! நீ ஏன் இந்த மரத்தை வெட்டுகிறாய்? அதைச்சொல்" என்றுகேட்டது. குடியானவன், "நீயேன் அதைக்கேட்கின்றாய்? என்மரத்தை நான் வெட்டினால்; உனக்கென்ன?" என்று கேட்டான். பேய், "நீ உன் இஷ்டப்படி நட. அதைப்பற்றி நான் உன்னை ஒன்றுஞ் சொல்வதற்கில்லை. எந்தவேலைக்காக இதைவெட்டுகின்றாய் என்றுகேட்டேன்" என்றது. அடுக்குருட்டி, "நான் குடியானவனல்லவா? எனக்குப் பலவேலைகளுக்கு மரம் வேண்டியதாயிருக்கிறது. முக்கியமாக இப்போது நான் எள் விதைக்கவேண்டும். அதற்காக நிலத்தை உழுதாக வேண்டியிருக்கிறது. கலப்பையில்லை—" என்றான்.

பேய், "இவ்வளவுதானா? நீ இதை வெட்டாதே! உனக்கு வருஷந்தோறும் தவறாமல் வேண்டிய எள் நான் கொடுத்துவிடுகின்றேன்" என்று கூறியது. அடுக்குருட்டி "சந்தோஷம்! எனக்குவேண்டியது எள்ளுதானே! நான் இதைவெட்டுவதில்லை. நீ சொன்ன வாக்குத்தவறினால் இதை வெட்டுவது தவறாது" என்றான். பேய், "நான் சொன்னபடி நடத்துகிறேன். இது சத்தியம்" என்றுகூறி அவனை அனுப்பிவிட்டு வருஷந்தோறும் எள்ளை மூட்டை மூட்டையாகச் சேகரித்துக்கொண்டுவந்து அவனுக்குக் கொடுத்துக் கொண்டிருந்தது.

இப்படியிருக்கையில் ஒருசமயம், இந்தப் பேய் வெகுவிசனத்துடன் உட்கார்ந்திருந்தது. அப்பொழுது அதனிடம் வேறொருபேய் வந்தது. இதனுடைய விசனத்தைக்கண்டு, "நீயேன் ஒருவாறாயிருக்கிறாய்

"உனக்கு என்ன நேர்ந்தது" என்று கேட்டது. பழைய பேய், புதுப்பேயைப்பார்த்து; "நானென்னவென்று சொல்வேன்!" என்று தொடங்கி, தனக்கும் அடுக்குருட்டிக்கும் ஏற்பட்டுள்ள ஒப்பந்தத்தைச் சொல்லி, "தினந்தோறும் எள் தேடுவதிலேயே என் காலங்கழிகிறது. எத்தனைநாள் இவ்வாறு அவதிப்படுவது. இன்றைக்கு அலுத்துப்போய்விட்டது. அதனால் விசனப்பட்டுக் கொண்டிருக்கிறேன்" என்றது. புதுப்பேய், 'சை! நீ ஒருபேயா! ஓர் அற்பமனிதனுக்கு அஞ்சுவதா? நன்றாயிருக்கிறது, உன் சௌரியம்! இது நமது பேய்க் கூட்டத்திற் கிழிவல்லவா? இதோ நான் போய் அந்த அடுக்குருட்டியை இன்றே கொன்று விட்டு உன் கஷ்டத்தை நீக்குகின்றேன் பார்" என்று கூறி அடுக்குருட்டியின் வீட்டுப் பசுத்தொழுவத்திலே போய் மறைந்திருந்து அவனைக் கொல்லச் சமயம் பார்த்திருந்தது.

இந்தப் பேய் போய்ச் சேர்ந்த கொஞ்ச நேரத்திற்கெல்லாம், அடுக்குருட்டி தன் மாடுகளுக்குச் சூடு போடுவதற்காகத் தொழுவத்திற்கு வந்து, சிலமாடுகளுக்குச் சூடுபோட்டான். அப்பொழுது தன் அருகேயிருந்த தம்பியை அடுக்குருட்டிபார்த்து, "அடே புதுப்பேயைப்பிடித்து நன்றாய்ச்சுட்டு" என்றான். புதுப்பேய் என்னும் ஓர் ஊரிலிருந்து ஒரு மாடு வாங்கிவந்திருந்தான். அது புதுமாடு. ஆகையினால் அப்படிச் சொன்னான். இதைக்கேட்டதும் பேய் பயந்து, "இவன் அசாத்தியன். நாமிருப்பதை எப்படியோ அறிந்துவிட்டான். இவனிடம் நமது வீரம் பலியாது. இவனை வணங்கி நயந்து போவதே நல்லது" என்று எண்ணி, உடனே வெளிப்பட்டு, குடியானவனை வணங்கி நின்று, "எனக்குச் சூடுபோட வேண்டாம்" என்று கூறியது. குடியானவன் அதைப் பேயென்று தெரிந்துகொண்டு, "நீ எங்கே வந்தாய்? சொல்" என்று கேட்டான். புதுப்பேய், "இத்தனை நாளும் உனக்குப் புளிய மரத்துப்பேய் எள்ளல்லவா கொடுத்து வருகிறது. அது

இத்தனை நாளுங் கொடுத்து வருவதுபோல் எள்ளாக வேண்டுமோ அல்லது எண்ணெயாக வேண்டுமோ என்று கேட்டுவரச் சொன்னது" என்று கூறிற்று.

அடுக்குருட்டி, "சந்தோஷம்! நீயும் அதனோடிருந்து இன்று முதல் எண்ணெயாகவே கொண்டுவா; ஜாக்கிரதை" என்று கூறினான். புதுப்பேய், "நல்லது அப்படியே செய்வோம்" என்று வணக்கத்துடன் கூறி விடைகொண்டு புளியமரத்துப் பேயினிடம் போய் நடந்த சங்கதியைச் சொல்லி, "ஐயோ, உன்னைப் பிடித்த மனிதப் பேய் என்னையும் பிடித்ததே" என்று கூறிற்று. புளியமரத்துப் பேய், "அப்பா உன்னாலான உபகாரமா இது? நல்லது. ஓட மருந்து உண்டு உறங்கி விழுந்த கதைபோலாச்சு உன் செய்கை" என்று அதை வெறுத்துக்கொண்டு அன்று முதல் இரண்டு பேயுமாகக் குடியானவனுக்கு எண்ணெய் கொண்டு வந்து கொடுத்துவரத் தொடங்கின.

ஹாஸ்யம்.

ஒரு தரகுகாரன் வீடுவாங்குகிறவர் ஒருவரை விற்பனைக்குத் தயாராயிருக்கும் வீடுகளைக் காட்டுவதற்காகக் கூட்டிக்கொண்டு போகிறான்.

வீடுவாங்குகிறவர்:—'வீரராகவ முதலி தெருவிலிருக்கும் வீடு நல்லவீடுதானே, நீ பார்த்தாயா" என்று கேட்டார்.

தரகு:—அதற்கென்ன ஸார், எளவு நீங்க வந்து பாருங்களே.

வாங்கு:—இதென்னடா இது நாம்முதல் முதலில் வீடு வாங்குகிறோம். இவன் வந்து எளவு என்கிறானே! என்று நினைத்து 'உம்' என்றார்.

தரகுகாரன்:—வீட்டுக்கு அருகாமையில் வந்து நின்றதும்—பாருங்க ஸார், வீட்டை எமனாட்டமா? அந்த எளவு இடி விழுந்தால்தான் அசையுமா?—என்றான். (இந்தத் தரகு காரனுக்கு சீக்கிரம் காரியம் கைகூடும்; பணம் சம்பாதிக்கலாமல்லவா?

ஸ்ரீராமனுக்குக் கைகேயிசெய்த செய்கை.

சுந்தரம்—தாதா, நேற்றிராத்திரி இராமாயணப் பிரசங்கத்துக்குப போயிருந்தேனல்லவா ?

தாதா—ஆமாம், விசேஷமென்ன ?

சுந்தரம்—தசாதன் கைகேயினிடம் எப்படிக் கெஞ்சினன். ஐயோ பாவம்! கைகேயியின் பிடிவாதத்தைப்பார்த்தால் பெண்களைவெல்வது எவனுக்கும் அரிது என்று தெரிகிறது. சை! மகாகொடியவள். நல்லபிள்ளையென்று ஊரும் உலகமும் புகழும் இராமனைக் காட்டுக்கோட்டத் துணிந்தாளேபாவி!

தாதா—சுந்தரம்! அப்படித்திட்டாதே. ஸ்ரீராமன் கைகேயியைப் பின்னால் வனவாசங்கழித்து வந்தபிறகு முதலிலே அவளைத்தான் பணிகின்றான். "என்தாயே! உன்னால் நான் அடைந்த நன்மைகள்—பல"—என்று புகழ்கின்றான்.

சுந்தரம்—அது எப்படி தாதா ?

தாதா—கேள்—ஸ்ரீராமன் காட்டிலிருந்து வந்ததும்—கைகேயியைப்பணிந்து—" அம்மா—

"[1]பெற்றகோன் அன்பும் [2]நீதரு பரதன்
பெருமையும் மாருதி திறமும்
[3]எற்றரு [4]வான ராதிப னட்பும்
இலக்குவன் மிக்கபத் திமையும்
உற்றஜா னகியின் மெய்ம்மையின் வலியும்
[5]ஒன்னலார் பகைமையி னியல்பும்
மற்றவு மறிந்தே னுன்றனால் தாயே
வந்தனம் நின்திரு வடிக்கே!"—

என்று கூறினன். ஆதலால் கைகேயி ஸ்ரீராமனுக்கு நல்லவள்.

சுந்தரம்—அறிந்தேன். ஸ்ரீராமனுடைய குணம் பெரிது. தனக்குத் தீங்கு தேடியவர்களிடத்தும் அவன் அன்புகாட்டுகிறானல்லவா ?

தாதா—குழந்தாய்! இன்னொரு இரகஸ்யமிதிலுண்டு. பெரியோர்கள் சினந்து ஒன்றைப்பணித்தாலும் அது முடிவில் இனிதாகவே முடியும் என்பதும் இதிலடங்கிய கருத்தாகும்.

---

[1] பெற்றகோன்=தசாதன்; நீதரு=நீபெற்ற; [3] எற்றரு-சூரியன்பெற்ற; [4] வானராதிபன்—சுக்ரீவன்; [5] ஒன்னலார்=பகைவர்.

186450
...600 008

மார்க்கண்[illegible]

பூதலம் புகழும் புண்ணிய நதியாகிய கங்கை பிரவகித்துப் பாயும் திவ்யதேசத்தில் கடகம் என்றொரு திருநகர் உண்டு. அந்நகரில் குச்சகர் என்கிற ஒரு பிராமணர் இருந்தார். அவருக்குக் கௌச்சிகர் என்றொரு புதல்வரிருந்தார். அவர் வேதங்களை ஓதியுணர்ந்து நல்ல ஞானமுடையவராய் விளங்கினர். அவர் ஒருசமயம்தவஞ் செய்யத் திருவுளங் கொண்டார்; அதன் படியே ஒரு நாள் அந்நகர்ப் புறம்பே ஒரு காட்டின்கண் ஒரு தடாகக் கரையிலே போய் ஊண் உறக்கமில்லாமல் [4]மௌன நிலைகொண்டு பசு உராயும் கல்போல் அசையாமலிருந்து சிவ பெருமானுடைய பஞ்சாட்சரத்தை ஜபித்தபடியே தவஞ் செய்தார்.

அப்படி அவர் தவஞ் செய்கையில் மான், மரை, கடம்பு, காட்டா முதலிய மிருகங்கள் அவர் உடலிலே தம் உடல் தினவுதீர உராய்ந்து கொண்டுபோகும். கௌச்சிகர் அதனை யுணராமல் கடுந்தவஞ்செய்தார். அவருடைய தவநிலைமையைக் கண்டு மகிழ்வுற்ற விஷ்ணு, பிரமன், இந்திரன் முதலியவர்கள் அங்கு வந்து அவருக்குக் காட்சிதந்து, "அப்பா உன் தவம்

பெரிது. இனி உனக்கு இன்று முதல் மிருககண்டேயர் என்று பெயர் வழங்கக்கடவது" என்று திருவாய் மலர்ந்தருளினார். மிருககண்டேயர் எழுந்து அவர்கள் முன் இருகை தொழுது நின்று துதித்தார். அதைக் கண்டு மனமகிழ்ந்த அவர்கள், "அப்பனே உன்னிடத்தில் சிவபெருமானுடைய திருவருள் பெருகும். முன் செய்தத் தீவினைகளெல்லாம் உன்னை விட்டு ஓடும்" என்று அநுக்ரகஞ் செய்து மறைந்தருளினார்.

அப்பால் மிருககண்டேயர் பரம சந்தோஷத்தோடு தன் தந்தையினிடம் சென்றார். தந்தை மகனைக் கண்டதும் இருகரங்களாலும் தழுவிப் பெரு மகிழ்ச்சியோடு "அப்பனே, நீ தவஞ் செய்யும்போது அங்கு நிகழ்ந்தவைகளைச் சொல்லு" என்று கேட்டார். மிருககண்டேயர் அங்கு நிகழ்ந்தவைகளை யெல்லாம் சொன்னார். குச்சகமுனிவராகிய அவர் தந்தை அவற்றைக் கேட்டதும் அன்போடு மகனை நோக்கி, "நீ செய்த தவம் சிறந்தது. இது போன்ற தவம் நம் குலத்தவரில் யாவரும் செய்ததில்லை. உனக்கு இனி கிடைத்தற்கரிய தொன்றுமில்லை. தவம் எல்லாவற்றையும் கொடுக்கும். தவத்திற்கு மேலானது ஒன்றுமில்லை. தவப்பயனைத் தேடுவதுதான் மக்கட்கழகு. அதனை நீ தேடிக் கொண்டாய். இனி நீ செய்ய வேண்டியது வேறொன்றுண்டு. பிரமசரியம், கிரஹஸ்தம், வானப்பிரஸ்தம், ஸந்நியாஸம்—என்னும் நான்கு ஆசிரமங்களுண்டல்லவா? அவற்றுள் பிரமசரிய விரதம் நீ இதுவரையில் அனுஷ்டித்து வந்தது. நீ இனிக் கிரஹஸ்தாசிரமத்தை அநுஷ்டித்தல் வேண்டும்" என்றார்.

இதைக் கேட்டதும் மிருககண்டேயர், "நல்லது" என்று மனத்திற்குள் சிறு நகை செய்து அவர் முன்னே வணங்கி நின்று, "தந்தையே! தாமுணராததை நான் சொல்ல வரவில்லை. இந்தப் பிறவி யெடுத்ததே முன் ஜன்ம வினைவசத்தாலேயாம். இந்த வினையை ஒழித்தாலல்லது முத்தியின்பம் கிட்டாது. இப்படியிருக்க, ஒரு பெண்ணை மணந்து இல்லறத்தை நடத்துவதானால் என் வினையை நானெப்படி ஒழிக்கத் தக்கவனாவேன்? பெண்களோடு வாழ்வது பெருவினைத் தொடர்பையல்லவா கொடுக்கும்? அதனை ஒழிப்பது எப்படி? இது நல்ல நீரிருக்கச் சேற்றிலே மூழ்கிச் சரீரத்தின் அழுக்கை நீக்க எண்ணுவது போலல்லவா ஆகும்? பெண், மண், பொன், மக்கள், மனை இவைகளிலே கொள்ளும் ஆசை சுலபமிலே நீங்குவதாகுமோ? இந்த ஆசையே பிறவித் துன்பத்தைத் தருவதாம்—இது இருக்க; உலகத்திலே இல்லறம் முட்டுப்படாமல் நடைபெறுவது நல்ல குணமுடைய மனைவியினாலேயாம். கணவன் சொல்வழி நடவாத மனைவி வாய்ப்பளாயின் அந்த இல்லறம் யாதாம்? கொடிய பாவங்களிலே தள்ளுமொரு பெரும்பகையேயாமன்றோ? ஆதலின் இல்வாழ்க்கையென்னும் சிறைவாசத்தை நான் விரும்பவில்லை. தவமென்கிற அழியாச் செல்வத்தைப்பெறவே விரும்புகின்றேன்" என்றார்.

இதைக்கேட்ட குச்சகமுனிவர், "இவன் தவம் என்கிற நிதி தேடுவதிலேயே கருத்துடையவனா யிருக்கிறான். இப்படியிருந்தால் குலம் விளங்க, மக்கட்பேறு பெறுவதெப்படி? இவன் மனத்தை மாற்றவேண்டும்"

என்று கருதி, "மைந்தா நீ சொல்வது உண்மையே! ஆயினும் ஒரு கன்னிகையை மணஞ்செய்து குலத்தின் அபிவிருத்தியின் பொருட்டு ஒரு புத்திரனைப் பெற்ற பிறகு தவம் புரிவதே வேதவிதியாகும். புதல்வரே இறந்த பிதிர்க்களை நல்லகதி சேர்ப்பவர். புத்திரன் என்னும் சொல்லின் பொருளை நீ மறந்துவிட்டாய்போலிருக்கிறது. இந்த உண்மையை உணர்ந்தவன் இல்வாழ்க்கையை வெறுக்க மாட்டான். இல்லறமே நல்லறம். ஒரு மலைமேலே ஏற எண்ணங்கொண்டவன், படியின்வழியே மெதுவாய் ஏறிப் போகவேண்டுமேயல்லாமல், கீழேயிருந்து மேலே ஒரேபாய்ச்சலில் பாய்வது மதியாகுமா?

மைந்தா! இன்னும் கேள். இல்வாழ்க்கையில் ஏதேனும் தவறிடினும் அதற்குப் பரிகாரமுண்டு. தவவொழுக்கத்திலே தவறுண்டாமாயின் அதற்குப் பரிகாரங்கிடையாது. அது மலையின் உச்சியிலிருந்து விழுவதற்குச் சமானமாகும். ஆகையினால் நீ உன் முன்னோர்கள் அநுஷ்டித்து வந்த முறைமையையே மேற்கொள். இது சிவபெருமான் ஏற்படுத்திய வரம்பு. இதைமறுக்காதே! உலக இயலிது. இதனை மறுப்பது புத்தியல்ல. நற்குணமுடைய பெண்களினாலே இகபர மிரண்டும் கிடைக்கும். தன் கணவரையே தெய்வமாகக் கொண்டு வழிபடும் கற்புடையவருடைய பெருமை பெரிது— 'பெண்ணிற் பெருந்தக்கயாவுள கற்பென்னுந் திண்மையுண்டாகப் பெறின்'—என்றார் ஆன்றோர். மக்கட்பிறவியெடுத்தவர்க்கு இல்லறந்தான் பேருதவியாய் நிற்பது. இது தான் குற்றமற்றவழி. இது மறப்பதல்ல" என்றார்.

மிருககண்டுயர், 'அப்படியாயின், மூத்தோர் சொல் வார்த்தையமிர்தம்' என்பதையும் 'தந்தை சொல்மிக்க மந்திரமில்லை' என்பதையும் மேற்கொள்ளக் கடமைப் பட்டவனாதலின் தங்களுடைய சொற்படி நடக்கின்றேன். அன்றியும், "தாய், தந்தை, குரு இவர்களுடைய சொல்லை மறுத்தவரும் வேதநெறி கடந்தவரும் எரி நகரத்தில் வீழ்வர்" என்கிற நியாயமும் என்னைத் தமது சொற்படி நடக்கக் கட்டுப் படுத்துகிறது" என்றான்.

குச்சகமுனிவர், "மனமகிழ்ந்தேன். நானும் உய்ந்தேன். உன்னை ஈன்றதாயும் உய்ந்தாள். நம்மைச் சேர்ந்தயாவரும் நலம் பெற்றனர்.—

மைந்தா! நீ விரும்பியபடி ஒரு குற்றமுமில்லாதவளான இல்வாழ்க்கைக் கியைந்த ஒரு பெண்ணைத்தேடி உனக்கு மணஞ்செய்விப்பேன்" என்றார். மிருககண்டுயர், உடனே தந்தையின் திருவடிபணிந்து, "தவத்திற் சிறந்த தமக்கு முற்றுப்பெறாததுண்டோ? இருப்பினும் நான் தங்களிடம் வேண்டுவதுண்டு சில; அவற்றைக் கூறுகின்றேன்—

தாய் தந்தையரை யிழந்தவர், உடன் பிறப்பில்லாதவர், சுற்றமற்றவர், திருவற்றவர், உயர்ந்த குடிப் பிறப்பில்லாதவர், நோயாளர்களுக்குப் பிறந்தவர், விலங்கு, மலை, வனம், நதி இவற்றின் பெயர் பூண்டவர், ஊமையர், முடவர், செவிடர், தம்மைச் சமயமல்லாத சமயத்தில் அலங்கரித்துக் கொள்வோர், பேருண்டி விரும்புவோர், பெருந்துயில் கொள்வோர், சகோத்திரத்தில் பிறந்தவர், வயதில்மூத்தவர், பருத்தவர், குட்டையர், நெட்டையர், நாணமற்றவர், வீணை அடிக்கடி

சிரிப்பவர், கோபமிக்க உடையவர், சண்டை செய்வோர், கூத்துமுதலியன விரும்புவோர், அன்பு இரக்கமுதலியன இல்லாதவர் தெய்வபக்தியில்லாதவர், குலவொழுக்கத்தைக் கடந்தவள், சாய்ந்த கண்ணர், பூனைக்கண்ணர், பெருங்கூந்தலுடையார், பருத்த இடையினர்—முதலிய இவைபோன்ற தன்மையுடைய பெண்கள் மணக்கத் தக்கவர்களல்லர். இப்படிப்பட்ட பெண்ணை நான் விரும்பேன். ஆகையினால் ஆராய்ந்து பார்த்து நல்ல கன்னிகையை மணஞ்செய்விக்கவேண்டுகின்றேன்" என்றான். குச்சகமுனிவர் "அவ்வாறே நல்ல கன்னிகையைத் தேடி மணஞ்செய்விக்கின்றேன்" என்றார்.

பிறகு அவ்வாறே அம்முனிவர் பல இடங்களுக்குச் சென்று சர்வலக்ஷணங்களும் நல்ல குணங்களும் அமைந்த இல்வாழ்க்கைக்குரிய பெண்ணைத்தேடி வந்தார். கடைசியில் சோழதேசத்திலே அநாமயமென்னும் வனத்திலே தவஞ்செய்து கொண்டிருந்த உசத்திய முனிவர்க்கு அப்படிப்பட்ட ஒரு கன்னிகை இருப்பதை அறிந்து அவரிடம் போய் மணம்பேசி முடித்தார். பிறகு அவர் தம்மூருக்குச் சென்று தம்முடைய புத்திரரை அவ்வூருக்கு அழைத்துச் சென்றார். அங்கே உசத்திய முனிவர் ஒரு சுபதினத்திலே சுபமுகூர்த்தத்தில் தம்முடைய புதல்வி விருத்தையை மிருகசண்டூயருக்கு விவாகஞ் செய்துகொடுத்தார். (வரும்)

பாலவிநோதினி 1919, 1920, 1921-வது வருஷத்திய வால்யம் காலிகோ பைண்டு தங்கக்கில்டுடன் கூடியது. ஒவ்வொன்றும் விலை ரூபா 2—0—0.
பாலவிநோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம் ரூ. 1-12—0
மானேஜர்:—பாலவிநோதினி ஆபீஸ்,
ராயபேட்டை, சென்னை.

இந்த வருஷத்திய பொங்கற் பண்டிகையில் பாலவிநோதினியின் வாழ்த்து.

வெண்பா

வண்மதியைப் போல்வந்து மாதந்தோ றுஞ்சிறுவர்
ஒண்மதியை யோங்கு விக்கும் ஊக்கமுள்ள—கண்மணியாம்
பால விநோதினி! நீ பல்லாண்டு பல்லாண்டாய்
ஞாலமதில் வாழ்க நயந்து

விருத்தம்.

பாலவிநோ தினியென்னும் பாலர்கள்நண் பா! வுன்னைப்
பயந்து பாலர்
சீலமிகுஞ் செல்வரெனச் சிறந்துநல மனைத்துமுறத்
திங்கள் தோறும்
கோலமுட னளித்துவரும் வரகவிசுப் பிரமணியக்
கோத்தே வென்றும்
வேலவனார் திருவருளால் மேதினியில் சுகமருவி
விளங்க மாதோ—

ம. இராஜகோபால பிள்ளை,
வித்வான், கோமளேசுவரன் பேட்டை.
சென்னை.

சிறுவர்களுக்கான கதைகள்

கஜேந்திரமோக்ஷம். கண்ணப்பன்	...	0	4	0
ருக்மாங்கதன் ...	...	0	4	0
பரதன் (வசனம்) ...	...	0	8	0
அராபிக்கதை ...	...	3	0	0
விக்கிரமாதித்தன் கதை (பெரிய எழுத்து)	...	4	0	0

மானேஜர் :—பாலவிநோதினி ஆபீஸ்,
ராயப்பேட்டை, சென்னை

தேச வாழ்த்து.

வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே
வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்க வாழ்கவே (1)

பரதனுண்ட பழையநாடிது பண்பாய் வாழ்கவே
பரதகண்டமாம் பாரதநாடிது பண்பாய் வாழ்கவே (2)

சத்தியமேஜெய மென்றவரிச் சந்திரன் வாழ்கவே
நித்தியம்புகழ்ந் நெறியினன்வாழ் நிலமும்வாழ்கவே (3)

இரவில்நகர் சோதனைசெய்ரகு பதியும் வாழ்கவே
இராமராண்ட இந்தநாடு இனிதாய் வாழ்கவே (4)

தருமராண்ட தரணியிதுவும் தழைத்து வாழ்கவே
அருமைத்தமி ழரசராண்ட அவனி வாழ்கவே (5)

சந்ரதிமதி சீதை திரௌபதி தங்கள் தலமும் வாழ்கவே
சிந்து கங்கை காவிரி சிறக்குந் தேசம் வாழ்கவே (6)

இந்தியாவென்னும் இங்கிதநாடு என்றும் வாழ்கவே
சந்ததம்நீர்சொரி இமயமலைசேர் ஜகமும் வாழ்கவே (7)

பலவளஞ்செறிந் துறையும்பாரத தேவி வாழ்கவே
பலகலையருள் செய்தபாரத மாதா வாழ்கவே (8)

நிலமகளெனுந் திலகமாமிந்து நேரிழை வாழ்கவே
பலமுறுமக்கள் பலரையீன்ற பாரதி வாழ்கவே (9)

முன்னையகாலம் போலவிந்நில மக்கள் வாழ்கவே
நன்னயமிக்குற நம்சிறுபாலர்கள் நாளும் வாழ்கவே (10)

பாரதியார் வர-கவிசுப்ரமண்யர் பாலர் வாழ்கவே
சாரம்நிறையும்பாலவிநோதினி தரையில்வாழ்கவே (11)

(பரிமண-பல்லவராயர்)

குறிப்பு:—இது அநேகமாய் தேசவாழ்த்துப் பாடலாய் அமைந்திருப்பது பற்றியும், ஒவ்வொரு ஆரம்பப்பாடசாலை ஆசிரியரும் இவ்வாழ்த்துப் பாடலைத் தினந்தோறும், காலையில் பாடசாலைதிறந்து பாடங்கள் துவக்குமுன் கடவுள்துதி, இராஜ வாழ்த்து முதலிய, சிறுவர்களைப் பாடச்செய்யும்போது 'குடியுயரக் கோலுயரும்,' என்பதற் கேற்பப் பாடச்செய்யுமாறு வேண்டுகின்றேன்.

THE TATA PRINTING WORKS, .. T..MBU CHETTY ST., MADRAS.

186450

ஸ்ரீகௌரி பானம்ருதம்

காப்பிக்குப்பதிலாக உபயோகிப்பது.
நம்தேசத்து மூலிகைகளின் கிழங்குகள்
வித்துக்கள், புஷ்பங்களால் தயாரிக்கப்பெற்றது
காப்பியைப்போலவே ருசியும் மணமும் உள்ளது
ஒரு முறை உபயோகித்தவர்கள் மேலும், மேலும்
உபயோகிக்க விரும்புவார்கள்.

இதன் அரிய குணங்கள்

ரத்தசுத்தி, பித்தசாந்தி, உஷ்ணசாந்தி உண்டாக்கி மலச்சிக்கலை நீக்கி, பசிதீபனத்தை கொடுக்கும், இருதயம், மூளை இவைகளுக்கு பலத்தைக் கொடுக்கும், ஞாபக சக்தி, ஆரோக்கியம் இவைகளை விருத்தி செய்யும். கணைச் சூடு, மூலச் சூடு, பித்த எரிச்சல், வாந்தி, மயக்கம், மேக வெட்டை, நீரிழிவு இவைகள் நீங்கும்.

டின் ஒன்றுக்கு விலை அணா 8.

டஜன் ஒன்றுக்கு விலை ரூபா 5—12—0.

வி. பி. சார்ஜ் பிரத்தியேகம்.

விலாசம் தெரிவிப்போருக்கு 1922-ம், வருஷ காலண்டருடன் முழுவிபரமடங்கிய கேட்லாக் இனமாக அனுப்பப்படும்.

விலாசம் :—டாக்டர், வி. ஆர். சுந்தரம்,
ஆயுர்வேத வைத்தியமந்திரம்,
363, டைகிராப்ட்ஸ் ரோட்டு, ராயப்பேட்டை, சென்னை.

10624/81

சில அருமையான புத்தகங்கள்

வள்ளி நாயகி	0	12	0	சிவராத்திரி புராணவசனம்	1	8	0
மகா பாரதம் வசனம். 4-வால்யம்				...	15	0	0
பண்டித நடேசசாஸ்திரியார் ராமாயண வசனம்					15	0	0
சூதசங்கிதாசாராம்ருத வசனம்				... ...	1	8	0
தாயுமானவர் உரையுடன்	4	0	0	ஆநந்தராமாயணம்	5	0	0
ராமகிருஷ்ண விஜயம்	1	4	0	ஔவை அநந்தமிழ்	0	12	0
விவேகாநந்த விஜயம்	1	8	0	விநோதரசமஞ்சரி	2	0	0

சில புதிய நாவல்கள்.

தனபாக்யம் ...	2	0	0	விஜயபாஸ்கரன்	2	0	0
விக்ரமசிங்கன் கோட்டை	1	0	0	ரத்னபுரி ரகசியம்	3	8	0
அதிசயபொக்கிஷம்	1	8	0	வாதசுந்தரம் ...	2	0	0
தனபாலன் ...	2	0	0	கல்பலதா ...	1	4	0
கற்கோடை ...	2	0	0	ரோஜா ...	0	12	0

பாலவிநோதினி சந்தாதாரர்களுக்கு பிப்ரவரி முடிய ரூபாவுக்கு ஒரு அணாவீதம் கமிஷன் கொடுக்கப்படும்.

4-வது ஆண்டு பிறந்துவிட்டது!

பாலவிநோதினி

குழந்தைகளின் அன்பன்

இது குழந்தைகளின் கல்வி அபிவிருத்தியின் பொருட்டு வெளியிடப்பட்டுவரும்

சித்திரப் படங்களுடன் கூடிய
ஒரு சிறந்த மாதாந்தப் பத்திரிகை

இதன் ஆசிரியர்

வரகவி-திரு. அ. சுப்ரமண்ய பாரதி

சந்தாவிபரம்.

வருஷசந்தா உள்நாடு ரூ. 1 8 0 வெளிநாடு	ரூ.	2	0	0
மாதிரிப்பிரதி ...	,,	0	2	0
1, 2, 3-பைண்டு வால்யம் கலிகோ தங்கக் கில்டுடன் கூடியது ஒவ்வொன்றும் விலை	ரூ.	2	0	0
பாலவிநோதினி சந்தாதாரர்களுக்கு மாத்திரம்	ரூ.	1	12	0

விலாசம்:—மானேஜர்—பாலவிநோதினி ஆபீஸ்,

ராயப்பேட்டை போஸ்ட், சென்னை.